**முல்லைத்தீவு மாவட்டத்தின் பதினொரு கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கம் - 2024**

-----------------------------------------------------------------------------------------------------------------

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** முல்லைத்தீவு மாவட்டத்தின் பதினொரு கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** முல்லைத்தீவு மாவட்டத்தின் 11 கமநலசேவை நிறைவேற்றுக் குழுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 11 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களுக்கும் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டதுடன் அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 7 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களால் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டிருந்த 221.10 மெட்ரிக் தொன் மானிய உர இருப்பு நிலையத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | விற்பனை செய்த பின்னர் கொடுப்பனவு செய்வதால் காட்டவில்லை இனிவரும் காலங்களில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மானிய உர இருப்பினை உரியவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | **நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டியமை** 03 நிறைவேற்றுக் குழுக்களுக்கு சொந்தமான கட்டிடம், தொலைக்காட்சி பொட்டி மற்றும் விவசாய உபகரணங்கள் ஆகியவற்றின் கூட்டு மொத்தம் ரூபா 1,016,703 மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இனி வரும் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும். | நடைமுறையல்லா சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் 05 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் கடந்த நிதியாண்டு காலப்பகுதிகளுக்குரிய பசளை கையாளுகைச் செலவினுடைய மீளளிப்புத் தொகையான ரூபா 335,035 ஆனது குறித்த நிதியாண்டிற்குரிய வருமானமாக வெளிப்படுத்தப்பட்டமை. | இனி வரும் ஆண்டுகளில் இவ்வாறான தவறுகள் தவிர்க்கப்படும் | செலவுகள் தொடர்புடைய ஆண்டுகளில் காட்டப்பட வேண்டும். பெறப்பட வேண்டிய மீதிகள் நிதிக்கூற்றுக்களில் பெறப்பட வேண்டிய சொத்தாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் |
| (ஈ) | வருமான மிகையை கூட்டிக்காட்டியமை<br>03 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களிலும் கூட்டுமொத்தம் ரூபா 1,349,542 செலவிலும் கூடிய வருமான மிகை பல்வேறு விடயங்கள் காரணமாக கூட்டிக்காட்டப்பட்டுள்ளது. | உரிய நிதியாண்டுக்குரிய வருமானம் மாத்திரம் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும;. | மீளாய்வாண்டுக்கான சரியான வருமானம் கணகீடு செய்யப்பட்டு இருக்க வேண்டும். பொருத்தமான சீர் திருத்தம் செய்யப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் 3 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் வருடாந்த பெறுமான தேய்வு கூட்டுமொத்தம் ரூபா 56,560 ஆல் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு மாத்திரம் கணிப்பீடு செய்து கணக்குகளில் உள்ளடக்கப்பட வேண்டும். அத்துடன் சீர்செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | வருமான மிகையை குறைத்துக் காட்டியமை<br>02 நிறைவேற்றுக் குழுக்களிலும் கூட்டுமொத்தம் ரூபா 207,754 செலவிலும் கூடிய வருமான மிகை பல்வேறு விடயங்கள் காரணமாக குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | பொருத்தமான திருத்தங்கள் கணக்கறிக்கையில் சீர் செய்யப்படும். | சீர்செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | மூலதனச் செலவு மீண்டுவரும் செலவாக காட்டப்பட்டமை<br>03 நிறைவேற்றுக் குழுக்களிலும் கூட்டுமொத்தம் ரூபா 492,999 பல்வேறு விடயங்கள் தொடர்பில் மீண்டுவரும் செலவாக காட்டப்பட்டுள்ளது. | 2025 கணக்கறிக்கையில் சீர் செய்யப்படும். | மூலதன செலவினம் மற்றும் மீண்டு வரும் செலவினம் சரியாக இனம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட செய்யப்பட வேண்டும். உரிய திருத்தங்கள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.3.2 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 03 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 02 உழவு இயந்திரங்கள், வாடகை வருமதி ரூபா 56,900 ஒரு கொடுப்பனவு ரூபா 700,000 மற்றும் உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது. | இனி வரும் காலங்களில் இதனைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை வேண்டும். |

### 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள்,விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| **(அ)** | **2000 ஆம் ஆண்டு 46 ம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்** பிரிவு 44(1) | 7 கமநல சேவை நிறைவேற்றக்குழுக்களினால் குறிப்பிட்ட சட்டத்தின் பிரகாரம் பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் இனிவரும் காலங்களில் உரிய முறையில் பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் கணக்குகள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். செய்யத் தவறிய உத்தியோகத்தர் மீது. நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ஆ)** | **அரச நிதி சுற்றறிக்கை** 28 ஆகஸ்ட் 2020 ஆம் திகதியிடப்பட்ட 01/2020 ஆம் இலக்கத்தின் பந்தி 9.1 | 6 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் காசு, காசோலை மற்றும் களஞ்சியத்துடன் தொடர்புடைய கடமைகளிலீடுபட்டு வரும் ஏனைய உத்தியோத்தர்களிடமும் பிணையங்கள் பெற்றுக்கொள்வதற்கு கடந்த 04 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணைப்பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான 11 நிறைவேற்றுக் குழுக்களின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 3,959,229 குறையான்றாக காணப்படுவதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான குறை ரூபா 1,070,006 தொகையாக காணப்பட்டது. அதன் படி மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 2,889,223 தொகையால் பற்றாக்குறையின் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 11 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டிற்கான 31 டிசம்பர் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 3,042,604 பெறுமதியான வருமதிகள் மற்றும் ரூபா 13,622,366 பெறுமதியான சென்மதிகள் என்பன கடந்த 11 ஆண்டுகளாக உரியவாறு அறவிட்டுக் கொள்வதற்கோ அன்றேல் முறையே உரியவாறு செலுத்தித் தீர்ப்பதற்கு ஆக்கஶ்ர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட மற்றும் செலுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய காலத்தில் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க தவறிய உத்தியோகத்தர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அத்துடன் வருமதிகளை அறவிடுவதற்கும் சென்மதிகளை தீர்ப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 3 கமநல சேவை நிறைவேற்றுக் குழுகளினால் மானிய விலையடிப்படையில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த இரண்டு சில்லு உழவு இயந்திரங்களுக்கான குத்தகை வாடகை ரூபா 1,099,600 ஆனது கடந்த 11 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்கவோ அன்றேல் குத்தகைக்காரர்களிடமிருந்து உழவு இயந்திரங்களை பறிமுதல் செய்யப்படவோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வருமதிகளை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அத்துடன் ஒப்பந்தப் படி அறவீடு செய்ய தவறிய உத்தியோகத்தர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 குறித்த நோக்கங்களுக்கு உபயோகிக்கப்படாத நிதியங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 07 கமநல சேவை நிறைவேற்றக் குழுக்களின் கமக்கார அமைப்புகளினதும் விவசாயிகளின் பிள்ளைகளில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு பரிசுப்பொருட்கள் மற்றும் வெகுமதிகளை வழங்குவதற்காக பல்வேறு தரப்பினர்களிடம் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 2,081,720 கடந்த 01 தொடக்கம் 09 ஆண்டுகளாக குறித்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | புலமைப்பரிசில் நிதியத்தை குறித்த நோக்கத்துக்கு உபயோகிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.3 வாகன தள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த 107 விவசாய உபகரணங்கள் பழுதுபார்த்தல்கள், திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காது கடந்த 04 தொடக்கம் 07 ஆண்டுகளாக வாகனத் தரிப்பிடத்தில் விடப்பட்டிருந்தன. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பயன்படுத்தப்படாத சொத்துக்களை முறையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 11 கமநல சேவை நிறைவேற்றுக் குழுகளும் 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்திற்கமைவாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களினை 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளும் பொருட்டு கமநல சேவைகள் நிலையத்தினால் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்த கொள்வதற்காகச் செயற்படுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களை அளந்து கொள்வதற்கான குறிகாட்டிகள் என்பன 07 ஆண்டுகளாக அடையாளம் காணப்பட்டுச் செயற்படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 11 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களின் செயற்பாடுகளை நிதி ஒழுற்க விதி 133 மற்றும் 134 இற்கமைவாக உள்ளகக் கணக்குப் பரிசோதனைக்குட்படுத்துவதற்கு கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் கடந்த 11 ஆண்டுகளுக்கு மேலாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்கு விதிகளின் படி உள்ளகக் கணக்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 5. கமநல வங்கி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 5 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் கமநல வங்கியால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த விவசாய கடன் கூட்டுமொத்தம் ரூபா 2இ334இ299 கடந்த 12 ஆண்டுகளாக உரியவாறு அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் | உரிய காலத்தில் கடனை அறவிட தவறிய உத்தியோகத்தர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன் நிலுவைகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |